# இந்தியாவை அடுத்து மேற்கு நாடுகளும் இல.

யாழ்ப்பாணம்
பருவவெளியீட்டுப்பகுதி

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 8 இதழ் 40
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21 — 03 — 1992

## தமிழரை அனுப்பமுயற்சி

(புதுடில்லி)
இந்தியாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் அனைவரும் இலங்கைக்கு அனுப்பப்படும் பட்சத்தில் வெளிநாடுகளிலுள்ள அனைத்து தமிழ் அகதிகளும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாமென மேற்குலக ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்த தகவல் ஒன்றை

(4-ம் பக்கம் பார்க்க)

## 30 ஆயிரம் அகதிகள் அடுத்த மாதம் இலங்கை திரும்புவர்

(கொழும்பு)
தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் 30 ஆயிரம்பேர் அடுத்தமாதம் 8ம் திகதி நாடு திரும்பவுள்ளதாக இந்தியா இலங்கைக்கு திட்டவட்டமாக அறிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## சொந்த விருப்பம் தெரிவித்தோர் சிலரே

(லண்டன்)
இந்தியாவில் தங்கியுள்ள சுமார் இரண்டு லட்சத்து 20 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் 30 ஆயிரம் பேர் மட்டுமே தமது சொந்தவிருப்பத்தின்பேரில் இலங்கைக்கு திரும்பிச் செல்ல சம்மதித்திருக்கிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# நான்காவது நாள் மோதல்:

# மணலாறுமாவட்டத்தில்நேற்று

# உக்கிர விமானத் தாக்குதல்

## கடற்பகுதியில் பீரங்கிப்படகுகள் குவிப்பு

(யாழ்ப்பாணம்)
மணலாறு மாவட்டத்தில் நேற்று நான்காம் நாளாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா ராணுவத்தினருக்குமிடையில் தொடர்ந்தும் உக்கிரமோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. கடந்த மூன்று நாட்களையும்விட நேற்று இப்பகுதியில் கடுமையான விமானத்தாக்குதல்களும், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களும் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மணலாறு மாவட்டத்தின் கடற்பிராந்தியங்களில் பெருந்தொகையான பீரங்கிப் படகுகள் நேற்று குவிக்கப்பட்டதாகவும் கடற் பிராந்தியங்களிலிருந்து ஏவப்படும் பீரங்கிக்குண்டுகள் மணலாறு, முல்லைத்தீவுப் பகுதிகளை அதிர

(4-ம் பக்கம் பார்க்க)

## அதிகாரி உட்பட 38 சிப்பாய்கள்பலி

[கொழும்பு]
மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்குமிடையில் தற்போது நடைபெற்றுவரும் மோதலில் இதுவரை ஒரு அதிகாரி உட்பட 38 இராணுவத்தினர் பலியானதாக இலங்கை அரசு நேற்று அறிவித்தது. (வி)

## 22வீரவேங்கைகள்வீரச்சாவு

(முல்லைத்தீவு)
மணலாறு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் 22 வீர வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கைகள் விபரம் வருமாறு:
மேஜர் ஜெயகரன் (கந்தையா ஐங்கரன்–கிளி

(4ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் மீது மென்மையான பலவந்தம் திணிக்கப்படுகிறது

(லண்டன்)
இலங்கைக்குத் திரும்பிச் செல்வது அகதிகளின் சொந்த விருப்பத்தின் பேரிலே மட்டும் தான் என்றாலும் கூட இலங்கைத் தமிழ் அகதிகள் மீது ஒருவிதமான மென்மையான மெல்லிய பலவந்தமும் திணிக்கப்பட்டு வருவது இப்போது தெரிய வந்துள்ளது.

திரும்பிச் செல்வதாக விருப்பம் தெரிவித்துவிட்டு பின்னர் தயக்கம் காட்டிவரும் அகதிகள் இப்போது தங்கியுள்ள மிகப்பெரிய வசதிகள் நிறைந்த மண்டபம் முகாமிலிருந்து வேறு சிறிய முகாம்களுக்கு மாற்றப்பட இருப்பதாக மண்டபமுகாமில்அறிவித்தல்ஒன்றுமூலம்வெளியிடப்பட்டிருக்கிறது.

(4-ம பக்கம் பார்க்க )

## பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை 70 வாக்குகளால் தோல்வி

(கொழும்பு)
பிரதமர் டி. பி. விஜேதுங்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 70பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் உட்பட டலர் இவ் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அரச வங்கிகளை வர்த்தகமயப்படுத்துவது தொடர்பாக கடந்த மாதம் 19ம் திகதி பிரதமர் விடுத்த அறிக்கை தொடர்பாகவே பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## இரத்த வங்கிக்கு உடன் இரத்தம் தேவை

[யாழ்ப்பாணம்]
யாழ். பொது மருத்துவமனையின் இரத்த வங்கிக்கு உடன் இரத்தம் தேவைப்படுவதாக அவசரவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எதிர்வரும் திங்கட்கிழமை இரத்தம் வழங்குவதற்கு பதிவுசெய்தவர்கள் இன்றே இரத்தம் கொடுத்து உதவுமாறுகேட்கப்படுகின்றனர். இதேவேளையில் யாழ் குடாநாட்டில் எப்பகுதியிலிருந்தாவது கணிசமான தொகையினர் இரத்ததானம் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு போக்குவரத்துக்கு வாகனவசதிகளை வழங்க பாலம் பணிமனை முன்வந்துள்ளது. (56)

## கிளிநொச்சியிலுள்ள மரக்கூட்டுத்தாபனத்தை மூடிவிட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த உத்தியோகத்தர்கள் நால்வர் தலைமைக் காரியாலயத்திலுல் திடீரென்று அநுராதபுர மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

காட்டுப் பிரயோசனங்களை விற்பனைப்பிரிவுகளுக்கு அனுப்புவதைக் கடமையாகக் கொண்ட விநியோகப்பகுதி உத்தியோகத்தர்கள் அனை

(4-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் துறைமுகத்தில் 42 சிங்களவர் கடமை

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் 42 சிங்களவர்கள் கடமையாற்றுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்திலுள்ள உணவுக் களஞ்சியத்தில் 2 சிங்கள களஞ்சியப் பொறுப்பாளர்களும் 40 சிங்கள தொழிலாளர்களும் கட

(4-ம் பக்கம் பார்க்க)

## முதற்பிறப்புபதிவு பத்திரங்கள் இடைத்தன

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவிருக்கும் குமணைக் க பலில் 10 ஆயிரம் முதற்பிறப்பு பதிவு ப த்திரங்கள் வரவிருக்கின்றன.

யாழ், மாவட்டத்தில் இதுவரை 8000 குழந்தைகளின் பிறப்புகள் முதற்பிறப்புபதிவு புத்தகங்கள் இல்லாத காரணத்தால் பதியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## இளவரசர் அன்ருவின் குடும்பவாழ்வில் பிளவு

(லண்டன்)
பிரிட்டிஷ் இளவரசர் அன்ருவுக்கும் அவர்மனைவி சாராவுக்குமிடையில், விவாகரத்து அனேகமாக உறுதிப்படுத்தப்

(4ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவுடன் இணைந்து இந்தியா கடற்படை ஒத்திகை

(புதுடில்லி)

அமெரிக்காவுடன் சேர்ந்து இந்தியா அதன் முதலாவது கூட்டுக் கடற்படை ஒத்திகைகளை விரைவில் மேற்கொள்ள இருக்கிறது. இந்திய வெளி உறவு இணையமைச்சர் திரு. எடுவார்டோ பெலேரோ இத்தகவலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்திய வெளி உறவுச் செயலர் திரு. ஜே என். டிக்ஸிற், கடந்த வாரம் வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நாடாளுமன்றில் உறுப்பினர்களுக்கு இணையமைச்சர் திரு. பெலேரா விளக்கம் அளித்தார்.

ரஷ்யா, சீனு, இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய மாநாடு ஒன்றில் இந்தியா நம்பிக்கை வைக்கத் தயாரில்லை. அணு ஆயுதப் பரம்பல் தடுப்புக் குறித்து அமெரிக்காவுடன் இந்தியா பேசலாம் என்று திரு. பெலேரோ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

உத்தேச அணு ஆயுதப் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல், ஈராக் மற்றும் முன்னைய சோவியத்தின் மத்திய ஆசியக் குடியரசுகளையும் சேர்க்குமாறு டிக்ஸிற் வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகளிடம் கேட்டதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ ஒத்துழைப்பின் மூலம் புதிய யுகம் ஒன்றை ஆரம்பிக்கும் பேச்சுகளுக்காக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கடந்த சில மாதங்களாக இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## வரி விளம்பரம்


### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் இருந்து தயாரித்த Welpenela Capsules கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5992)

### தேவை

அச்சகத்தில் அச்சுக் கோர்த்தல் (கொம்போசிங்) செய்வதற்கு இரண்டு பெண் பிள்ளைகள் உடனே தேவை. ஓரளவு தெரிந்தவர்களும் வரலாம். ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (சி-6078)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

### மருத்துவபீடம்

இறுதியாண்டு மருத்துவபீட (மீள்) பரீட்சை 1992

மேற்கூறப்பட்ட பரீட்சை 1992 - 03 - 30ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முன்னர் அறிவித்தபடி 1992 - 03 - 23ல் ஆரம்பமாக மாட்டாது.

பதிவாளர்

[ஏ-1994)


## விண்ணப்ப படிவம் திரும்பி வந்தது

[ஊர்காவற்றுறை)

யாழ். நகர் (ஜே/74) பிரிவு கிராமசேவை அலுவலருக்கு கொழும்பிலிருந்து சில அடையாள அட்டை விண்ணப்ப படிவங்கள் திரும்பி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சரியான விபரங்கள் இல்லாத படியாலும் பெயர் மாற்றங்களாலும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

## ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு பகுதியில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஊரியான் பகுதியை நோக்கிஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

மூன்று ஷெல்கள் வெறும் தரிசுநிலத்தில் வீழ்ந்து வெடித்துள்ளன.

நேற்று முன் தினமிரவு பலாலி முகாம் படையினர் கட்டுவன், ஏழாலைப்பகுதியை நோக்கியும் ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிச் சூட்டினையும் மேற்கொண்டனர். (56)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்டுவரும் வலைபந்தாட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்கள்வருமாறு:

நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து விக்கினேஸ்வரா அணிமோதும். இப்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இரு வலைபந்தாட்ட போட்டிகள் நடைபெறும்.

## காவல்துறை நடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை மீறி வரும் சைக்கிள் பயணிகள், வாகன சாரதிகள் மீது தமிழீழ காவல்துறையினர் கண்காணிப்பு செலுத்தி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை மீறிய சைக்கிள் பயணிகள், வாகன சாரதிகள் தமிழீழ காவல்துறையினரிடம சிக்கிக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு சிக்கிக்கொண்டவர்களுக்கு அவ்விடத்திலேயே வைத்து குற்றப்பணம் அறவிடப்பட்டது. (52)

## மலிவு விலையில் உணவு பொருட்கள்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணப்பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளில் உணவுப்பொருட்கள் மலிவாக விற்கப்படுகின்றன.

அரிசி கிலோ 15 ரூபாவாகவும், மா கிலோ 13 ரூபா 50 சதமாகவும், சீனி கிலோ 26 ரூபா 50 சதமாகவும் விற்கப்படுகிறது.

தனியார் கடைகளிலும் முன்பு உள்ள விலைகளிலிருந்து சிறிது விலை குறைந்துள்ளது.

## இஸ்ரேலிய தூதரகம் தகர்ப்பு: ஜிகாத் குழு உரிமை கோருகிறது

(லண்டன்)

கடந்த புதன்கிழமை ஆஜன்ரீனு தலைநகர் போனஸ் அயர்ஸில் இஸ்ரேலிய தூதரக குண்டு வெடிப்பிற்கு, ஈரான் சார்புடைய இஸ்லாமிய ஜிகாத் குழு பொறுப்பேற்றுள்ளது.

சென்ற மாதம் லெபனனில் கிஸ்புல்லா குழுவின் தலைவர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இக் குண்டு வெடிப்பை தாம் நடத்தியுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. (கே)

## திருக்குறள் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை நடாத்தும் அமரர் க. விஞசித்தம்பி ஞாபகார்த்த 'திருக்குறள்' மனனப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## வவுனியா வர்த்தகர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம்

(வவுனியா)

வவுனியா பஸ்நிலையக் கட்டடத் தொகுதியில் திறக்கப்படாமலிருக்கும் கடைகளை எதிர்வரும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டில் இருந்து திறந்து வியாபாரம் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

இது இறுதிச் சந்தர்ப்பம் என்றும், மேற்கொண்டும் கடை உரிமையாளர்கள் கடைகளைத் திறக்காதுவிடின் புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டு புதியவர்களுக்கு கடைகள் கொடுக்கப்படுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (கே)

## கனகபுரத்தில் மாவீரருக்கு நினைவஞ்சலி

(கிளிநொச்சி

கனகபுரம் கிராமத்தை சேர்ந்த மாவீரர்களான கப்டன் வாதவூரன் மற்றும் சங்கர் ஆகியோரின் நினைவாக கனகபுரத்தில் தனித்தனியாக அஞ்சலிக்கூட்டங்கள் இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. தீபன் கொள்கை முன்எடுப்பு பொறுப்பாளர் திரு. பிரசாந்தன் மேற்குப்பிரிவு பிரதேசப் பொறுப்பாளர் திரு. சஞ்சீவி மாவீரர் கப்டன் வண்ணனின் தந்தையார் மற்றும் திரு. குணரெத்தினம் வட்டவைத் தலைவர் திரு. கனகேந்திரனும் உரையாற்றினர்கள். (83)

## பாடும்மீன் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

அமரர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் ஞாபகார்த்தக் கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் பாடும்மீன் கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இறுதிப் போட்டியில் பாடும்மீன் கழகம் நாவாந்துறை சென். மேரீஸ் கழகத்தை 3-0 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியனாகியது.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டிக்கு நடுவராக திரு. ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை கடமையாற்றினர். (சி)

## புதிய தலைவர்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் புதிய தலைவராக திரு. என். இராமச்சந்திரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


## வெளியீட்டு விழாவும் பாராட்டு விழாவும்

புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி 2ம் பகுதி (புலவர் நா. சிவபாதசுந்தரம்)

22-03-92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டைத் தொகுதி
தமிழ்ச் சங்கம்

(சி-6075)



## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னையா மார்க்கண்டு

மண்ணில்: 1926-04-26 விண்ணில்: 1985-04-08

திதி: 1992 - 03 - 21

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, சகோதரன், சகோதரிமார், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்.

பிரதான வீதி,
சங்கானை.

(சி-6067)


## விளையாட்டி போட்டி

[யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் கனிஷ்ட பிரிவு வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்புவிருந்தினராக யாழ். மாவட்டத்தளபதி திரு, செந்தாளன் தமிழீழத் தேயக் கொடியையேற்றி ஆரம்பித்து வைப்பார்.

பிரதம விருந்தினராக, யாழ் பிராந்திய பொறியியலாளர் திரு. க. பத்மநாதன் கலந்து கொள்வார். திருமதி புஷ்பம் பத்மநான் பரிசில்களை வழங்குவார்.

## மார்ச் 31-ல் கந்தர்மடத்தில் ஔவையார் விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கையில் இதுவரையில் இடம்பெருத தமிழ் மூதாட்டி ஔவையார் விழா கந்தர்மடத்தில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் ஔவையார் விழா சிறப்பாக நடத்துவதற்கு அப்பகுதி மக்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இம் மாதம் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் விசேட வழிபாட்டுடன் இந்நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

ஔவையார் உருவப்படம் திரைநீக்கம் செய்தல், மங்கள விளக்கேற்றுதல், வரவேற்புரை தலைமையுரையுடன் சிறப்புரைகளும் இடம்பெற உள்ளன.

தெல்லிப்பழை துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையாற்றுவார்.

இரவு 8-00 மணிக்கு அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறும்.

நண்பகல் 12-00 மணியளவில் மக்களுக்கு அன்னதானம் வழங்கப்படவும் உள்ளது.

(56)

# முத்தமிழ் விழா மலருக்கான படைப்புஎதிர்பார்க்கபடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் பல பாகங்களிலும் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவை (1992) யொட்டி வெளியிடப்படவிருக்கும் முத்தமிழ் விழா மலருக்கான ஆக்கங்களும், கட்டுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

கட்டுரைகள் தமிழீழத் தேசிய பாரம்பரியங்களை அடியொற்றியனவாக அமைதல் வேண்டும்.

ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றில் சிறுகதை, நாவல், உரைநடை மற்றும் கவிதை முதலியன பற்றிய தனித்தனி ஆக்கங்கள், தமிழீழத்தின் சமூகவியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், தமிழீழத்தின் இசைப் பாரம்பரியம் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள், தமிழீழத்தின் அவைக்காற்றுக் கலைகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள், கிராமியக் கலைகள், தமிழீழத்தின் வாழ்க்கையோடு இணைந்துள்ளமை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், தமிழீழத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றிய கட்டுரைகள், நவீன தொழில் நுட்ப அறிமுகங்களால் ஏற்பட்ட மாற்றங்கள், மற்றும் சிறுகதை, கவிதைகள்என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

ஏப்ரல் 1ம் திகதிக்கு முன்னர் நேரிலோ, கடிதமூலமோ கலை, பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலகத்துடன் மலர்க்குழு, முத்தமிழ் விழாச் செயலகம், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம், தலைமைச் செயலகம், கோண்டாவில் என்ற முவவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

# கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு முன்னுள் அமைச்சருக்கு உத்தரவு

(கொழும்பு)

முன்னுள் அமைச்சரும், லலித்-காமினி குழுவின் முக்கியஸ்தருமான திரு. லக்ஷ்மன் செனிவிரத்ன தமது பாஸ்போர்ட்டை சி. ஐ. டி. பொலிஸாரிடம் ஒப்படைக்கவேண்டும் எனத் தெஹிவளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மகியங்கனை வர்த்தகர் கொலை வழக்கில் திரு. லக்ஷ்மன் செனிவிரத்ன 4வது எதிரியாகக் கடந்த வருட பிற்பகுதியில் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

தற்போது இவர் நாட்டை விட்டு வெளியேறுத வகையில் தமது பாஸ்போர்ட்டைச் சி. ஐ. டி. பொலிஸாரிடம் ஒப்படைக்கவேண்டும் எனவும், மாதம் ஒருமுறை பொலிஸ் நிலையம் செல்லவேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (சி)

# வயது முதிர்ந்தோர் நலனுக்கு அமைச்சர் குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வயது முதிர்ந்தவர்களைப் பராமரிப்பதற்கும், அவர்களின் நலனுக்குமென அமைச்சுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

சமூக நலன், வீடமைப்பு, போக்குவரத்து, நிதி, கல்வி, சுகாதாரம், தொழில், கலாசார அமைச்சுக்களின் பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கம் வகிக்க உள்ளனர். (கே)

# இராசிபலன்

**21/03/1992**

**சனிக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 08)**

திருதியை மு. இ. 8-46 வரைசித்திரைகாலை8-17வரை மரணயோகம், இராகுகாலம் காலை 9-17 முதல் 10-47 வரை, சுபநேரம் மாலை 3-17 முதல் 4-47 வரை.

மேஷம்: பெரியோர் ஆதரவு, புத்தித் தெளிவு, உற்சாகம்.

இடபம்: புதிய ஸ்தானம், தொழில் லாபம், மனநிறைவு.

மிதுனம்: பணவிரயம், தொழில் கஷ்டம், அலேச்சல்.

கடகம்: வீண் அவமானம், கடன்பகை, காரிய தடை.

சிங்கம்: குடும்ப பகை, நோய் உபாதை, மனச்சுமை.

கன்னி: தொழில் கஷ்டம், வீண் சினம், வாதத் திறமை.

துலாம்: எதிர்பாராத உதவி, பயணம், சகோதர பாசம்.

விருச்சிகம்: தனிமைப் படல், வேண்டாத உறவு, பயம்.

தனுசு: தொழில் மாற்றம், வாக்குவன்மை, அமைதி.

மகரம்: வேண்டியவை அடைதல், பிறர் உதவி, பாராட்டு.

கும்பம்: அன்னியர் பகை, அமைதிக் குறைவு, செலவு,

மீனம்: ஆவேசப் பேச்சு, மனக்குரோதம், கடும் பகை.

**- ஜோஸ்யர்**

# மணலாறு யுத்தம்: பெருமளவுபடையினர்காயம்

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாய்ப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்றுவரும் மோதலில், பெரும் தொகையான படையினர் பலத்த காயம் அடைந்துள்ளதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கண்ணிவெடிகள் படையினருக்குப் பெரும் சிரமத்தையும், இழப்பையும் ஏற்படுத்துவதாகவும், இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

# உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம்

(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்திற்கு அருகில், உருக்குலைந்த ஆணின் சடலம் ஒன்றை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தகவல் தெரிவிக்கையில், இரணைமடுக் குளத்தில் இருந்து வட்டக்கச்சிக்குச் செல்லும் பிரதான வாய்க்கால் கரையில் பிரஸ்தாப சடலம் காணப்பட்டது. உயரம் 5½ அடி, பொது நிறம். தலைமுடி மேலே இழுக்கப்பட்டுள்ளது. கழுத்தில் மஞ்சள் ரீசேட் காணப்படுகிறது. வெள்ளை ரீசேட்டும், வெள்ளைக் கோடுள்ள சேட்டும் அணிந்து காணப்படும் இந்தச் சடலத்துக்குரியவர் சுமார் 35 வயது மதிக்கத்தக்கவராவர்.

இறந்தவரின் உறவினர்கள், கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (83)

# இராணுவத்திடம் சிக்கிய 60 லொறிகளின் விபரங்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் ஏற்பட்ட இராணுவ நடடிக்கையின்போது அங்கு சிக்கிய 68 லொறிகளில் இதுவரையில் 8 லொறிகளின் பெயர் விபரங்களே அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும் மிகுதி 60 லொறிகளின் பெயர்கள் முழுமையாக தரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய முழு விபரங்களை லொறி உரிமையாளர் சங்கம் கவனத்தில் எடுத்து தரும் பட்சத்தில் அதற்கான ஏற்பாடுகளை தான் செய்ய இருப்பதாக யாழ். அரச அதிபர் கே மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார் (56)

# பாடசாலைகளில் விரைவில் ஆங்கில தினப் போட்டி

[உடுவில்]

இவ்வருடத்துக்கான ஆங்கில தினப்போட்டிகளை பாடசாலைகளில் நடாத்த ஆங்கில பாட உதவிக்ல்விக்ப்பணிப்பாளர் திரு. எஸ். தேவதவபாலன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஆங்கில மொழியில் வாசிப்பு, உச்சரிப்பு எழுத்துப் போட்டிகளை நடத்தவும், பாடசாலை, கொத்தணி மட்டத்தில் போட்டிகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைமட்டத்தில் ஜூன் 12ம் திகதிக்கு முன்பும், கொத்தணி மட்டத்தில் ஜூலை 11ம் திகதிக்கு முன்பும் போட்டிகளை நடாத்தி முடிக்குமாறும் மாவட்ட போட்டிகள் செப்ரெம்பர் 11ம், 12ம் திகதிகளில் நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (109)

# இலங்கைக்குக் கடன் உதவி

(கொழும்பு)

மக்கள் சீனக் குடியரசு இலங்கைக்கு 40 கோடி 50 லட்சம் ரூபாவை வட்டியில்லாக் கடனுக வழங்க முன்வந்துள்ளது.

இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் இணக்கம் காணும் திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்காகவே இக்கடன் வழங்கப்படுறது. (கே)

# செய்திச்சரம்

(சென்னை)

பொன்னேரி தொகுதியில் இருக்கும் பெரும்பேடு கிராம மக்கள், தங்கள் ஊரில் சாராயம் விற்கக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர் இதனுல் ஊரில் சாராயம் விற்றுக்கொண்டிருந்த அ. தி. மு. க. பிரமுகர் ஒருவருக்கு ஏகப்பட்ட கஷ்டமாகிவிட்டது. உடனே இவர் பொன்னேரி கிராம காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்து சாராயம் விற்கவிடாமல் மக்கள் தடுக்கும் விவரத்தைகூறியிருக்கிருர் தடுக்கிறவர்களைத் தாக்கும்படி பொலிஸார் ஆலோசனை கூற, அவர் ஒருபகுதி மக்களை தாக்கியிருக்கிருர். இதன்பின் பொலிஸார் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினுர்கள்.

## 36,000 பேர் பதவி நீக்கம்

தி. மு. க. ஆட்சியில் ஊரக வளர்ச்சி முறையில் ஊராட்சிக்கு உதவுவதற்காக மக்கள் நலபணியாளர்கள் என்ற பெயரில் ஒரு ஊராட்சிக்கு ஒரு ஆண், ஒரு பெண் என்ற விதம் தமிழகம் முழுவதும் 36,000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்தப்பணிக்காக இவர்களுக்கு 200 ரூபா மாத ஊதியம் வழங்கப்பட்டது. தேர்தலில் வெற்றி பெற்ற அ. தி. மு. க. அரசு பதவியேற்றவுடன் தமிழகத்தில் மக்கள் நலப்பணியாளர்கள் அனைவரும் பதவிநீக்கம் செய்யப்படுவார்கள் என அறிவித்துவிட்டது. ஆனுல் காமராஜர் ஆட்சிக்காலத்தில் நியமனம் செய்யப்பட்ட கிராம சேவகர்கள் தி. மு. க. ஆட்சி காலத்திலோ, கருணுநிதி ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட இளைஞர் அமைப்பு எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலோ. எம். ஜி. ஆர். ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட சத்துணவு அமைப்பாளர்கள் தி. மு. க. ஆட்சிக்காலத்திலோ பதவி நீக்கம் செய்யப்படவில்லை.

## எம் ஜி ஆர் மாவட்டம்

செங்கை அண்ணு மாவட்டத்தை எம். ஜி. ஆர். மாவட்டமாக்கிப் பல மாதங்களாகியும், சென்னைத் தொலைக்காட்சி அதைக்கண்டுகொண்டதாக தெரியவில்லை. தொலைக்காட்சி, செங்கை அண்ணு மாவட்டம் என்றுதான் தொடர்ந்து அறிவித்துவருகிறது.

## ஹிந்தியில் குறளோவியம்

கலைஞர் கருணுநிதியின் படைப்பான குறளோவியம் ஹிந்தியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 1989ல் கே. செல்லப்பன் என்பவர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். இப்போது ஹிந்தியில் மொழி பெயர்த்திருப்பவர் டி. எஸ். கே. கண்ணன். இவர் முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதத்தின் மருமகன்-குறளோவியம் ஹந்தி வெளியீட்டுவிழா பீஹாரில் நடந்தது.

## பகிரங்க மோதல்

பழனி எம். எல். ஏ. சுப்புரத்தினமும் அ தி மு க நகர செயலாளர் எஸ். கே. கே. ஹக்கீமும், பொதுக்கூட்ட மேடைகளில் பகிரங்கமாக மோதி வருகிருர்கள். பழனி பூங்கா வீதியில் எம். ஜி. ஆர். பிறந்தநாள்விழா நடந்தது. முதலில் எம். எல். ஏ. சுப்புரத்தினம் பேசமுற்பட்டபோது ஹக்கிமும் அவரது ஆதரவாளர்களும் மேடையில் அவரைப் பேசவிடாமல் தடுத்தனர். மேடையில் இழுபறி நடக்கவே எம். ஜி. ஆர். விழாவிற்கு வந்த மக்கள் பாதியிலேயே கலைந்துசென்று விட்டனர்.

## திருமண அழைப்பில் எம் ஜி ஆர் பெயர்

சென்னை திருநகர் ஆற்காடு தெருவில் உள்ள எம். ஜி. ஆர். நினைவு இல்லத்தின் பொறுப்பாளர் முத்து மீது பொலிஸார் கஞ்சாவைத்திருந்ததாக கூறி அவரை கைதுசெய்து நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதிபதி அவரை 15 நாள் ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். அவரை பிணையில்செல்லக்கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. முத்து, எம். ஜி. ஆரின் கார்ச் சாரதியாக இருந்தவர். ஜானகிதான் இவரை பொறுப்பாளராக நியமித்திருந்தார்.

முத்து தன் அண்ணன் மகன் திருமணத்திற்கு ஜெயலலிதாவை கண்டுகொள்ளாமல் திருமண அழைப்பில் எம். ஜி. ஆர், பெயரைமட்டும் போட்டு திருமணத்தை நடத்த முற்பட்டது முதல்வர் ஜெயலலிதாவிற்கு பிடிக்கவில்லை இதனுல் தான் இந்த கஞ்சா வழக்கு போடப்பட்டதாக பேசப்படுகிறது.

## ஊழியர் மீது தாக்குதல்

ஆளும் கட்சி எம். எல். ஏ. யான சொக்கலிங்கம், சென்னை எம். எல். ஏ. விடுதித் தொலைபேசி இணைப்பு ஊழியர்களைத் தாக்கியுள்ளார். சம்பவம் நடந்த தினம் மதுராந்தகத்திலிருந்து எம்.எல்.ஏ, சொக்கலிங்கத்திற்கு 'கோல்' வந்தது. அப்போது கடமையில் இருந்த டானியல் என்பவர் சொக்கலிங்கத்திற்கு இணைப்பு ஏற்படுத்திஞர். அதற்குள் அந்தப் 'போன் கோல்' 'கட்' டாகிவிட்டது. இதற்கு ஊழியரின் அலட்சியமே காரணமெனக் கருதி, அந்த ஊழியர் மீது அவர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

# தவக்கால நற்சிந்தனை

''வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்''

(லூக் 15:18)

ஊதாரிப் பிள்ளையின் வரவைக்கண்டு மகிழ்ந்தார் தந்தைமனந்திரும்பும்எந்தப் பாவிக்கும்இறைவன் மன்னிப்பு வழங்கக் காத்திருகிருர் என்பதை நாம் இன்று உணர்வோம். எமது பாவங்களை நினைந்துஇறைத் தந்தையிடம் சரணடைவோம்.

**- மோ. தார்சிசியஸ்**

# தமிழக மீனவர் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசு மௌனம்

[சென்னை]

இலங்கை கடற்படையினுல் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று சட்டப்பேரவையில் கவனயீர்ப்பு தீர்மானத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

அவர்மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

தமிழகமீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது, கடத்தப்படுவது குறித்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவிற்குகடிதம்மூலமும், நேரிலும் தெரிவித்தும்கூட மத்திய அரசு இதுவரையும் உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும் கூறினுர்.

## இளவரசர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டதாக பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

திருமதி சாரா, ஒரு எண்ணை வியாபாரியுடன் தொடர்பு வைத்திருந்தது அம்பலமானதைத்தொடர்ந்தே இந்த விவாகரத்து முடிவானது.

தமது இருபுதல்வர்களையும் திருமதி சாரா பொறுப்பேற்கவும் தயாராக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாற்றுகிறுர்கள்.

இக் களஞ்சிய கட்டிடங்கள் யாவும் தற்போது திருத்தப்பட்டுள்ளன. இன்று காலை இக் களஞ்சியங்களிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு 10 லொறிகள் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவுள்ளன. (மா)

## கிளிநொச்சியிலுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் இடமாற்றம் செய்திருப்பது, கூட்டுத்தாபனம் வடபகுதியில் உள்ள தனது சகல பிரிவுகளையும் மூடிவிட எடுக்கும் நடவடிக்கையாக இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கிரிக்கெட்:

# மத்திய கல்லூரி 344 - 9
# சென். பற்றிக்ஸ் 183 - 6

(யாழ்ப்பாணம்)

யாழ், நகரில் நேற்று ஆரம்பமான முக்கியமான இரு பாடசாலை கிரிக்கெட் போட்டிகளில் யாழ். மத்திய கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறும் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 9 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 344 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

ஈ.ரகுதாஸ் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 143 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஜெகதாஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினுர். நேற்றைய ஆட்டம் முடிவடையும்போது சென், ஜோன்ஸ் கல்லூரி ஒரு விக்கெட் இழப்புக்கு 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

### சென்: பற்றிக்ஸ்

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெறும் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 183 ஓட்டங்களைப் பெற்றது. அஜன் தேவராசா ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களைப் பெற்றுர். (வி)

## 5 ஆயிரம் கோழிக் குஞ்சுகள் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மாதாந்தம் 5ஆயிரம் கோழிக் குஞ்சுகள் விநியோகிப்பதற்கு யாழ். பல்கலைக் கழக விவசாய பீடத்திற்கு நிதி ஒதுக்கித் தருமாறு யாழ். அரச அதிபரையும், மாவட்ட எம். பிக்களையும் பல்கலைக் கழக விவசாய பீடத் தலைவர் டாக்டர் நவரத்தினராசா கேட்டுள்ளார். (மா)

## 30 ஆயிரம் அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக கூறப்படுகிறது.

அகதிகளை ஏற்றி வருவது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இதற்கென தமிழ்நாடு அரசு கப்பல் ஒன்றை வாடகைக்குப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## இந்தியாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'இந்தியா ருடே' தெரிவித்துள்ளது. இச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்தியாவிலுள்ள அகதிகள் அனைவரும் இலங்கை திரும்பும் பட்சத்தில் இலங்கையில் தமிழரின் பாதுகாப்பிற்கு உகந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுமென்றும் இதற்கமைய வெளிநாடுகளும் தத்தமது நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்புமெனவும் ராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# கருணநிதிக்கு நெருக்கடி அதிகரிப்பு?

[புதுடில்லி]

தமிழக முன்னுள் முதல்வர் திரு. மு. கருணநிதிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிருந்த தொடர்பு குறித்து இந்திய மத்திய புலனுய்வுத் துறைக்கு பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளதாக 'இந்தியா ருடே' தெரிவித்துள்ளது.

சி, பி. ஐயினரால் கைது செய்யப்பட்ட புலிகள் உறுப்பினர் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 'டயறி' ஒன்றில் இதற்கான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் 'இந்தியா ருடே' குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் திரு. கருணநிதிக்கு நெருக்கடி ஏற்படலாமெனவும் அச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. (சி)

# பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சி நோக்கி நேற்றுக் காலையும் சரமாரியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொண்டமானுறு, வல்வெட்டித்துறை, ஊறணி போன்ற மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

நேற்றுக்காலை 6.30 மணி தொடக்கம் காலை 8மணிவரை தொடர் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. (க)

# பாலம்பிட்டியில் மற்ருெரு அகதிகள் முகாம் அமைக்க முடிவு

[கொழும்பு]

மடுத் தேவாலயத்திலும், பேசாலைப்பகுதியிலும் தற்போது இயங்கிவரும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அகதி முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் மூன்ருவது அகதிமுகாமொன்று அமைக்கப்பட இருக்கிறது.

மடுத்தேவாலயத்துக்கு மூன்று மைல் தொலைவிலுள்ள பாலம்பிட்டி என்ற இடத்தில் புதிய முகாமை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன வி)

## உண்ணுவிரதம்

[யாழ்ப்பாணம்]

நேற்றுக்காலை 8.30 மணிக்கு தியாகச்சுடர் அன்னை பூபதியின் இரண்டாம்நாள் அடையாள உண்ணுவிரதம் பண்டத்தரிப்பு, பனிப்புலம் அம்மன்கோவில் முன்றலில் ஆரம்பமானது. பெருந்திரளான மக்கள் இந்த அடையாள உண்ணுவிரதத்தில் கலந்து கொண்டனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட மாணவர்களின் மேம்பாட்டிற்காக திருகோணமலை மாவட்ட யாழ். பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் சங்கத்தினர், நாளை 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் காலை 10 மணிக்கும், பிற்பகல் 2-30 மணிக்கும் கலைநிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளார்கள். [வி]

## 22 வீரவேங்கைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி), லெப். ஒல்லியான் (சீனித்தம்பி குணரத்தினம்-மட்டக்களப்பு), லெப். புலித்தேவன் (செல்வம் செல்வேந்திரன் மட்டக்களப்பு), லெப். புகழ்வேந்தன் (நாகராசா சிவனேசன் - மூதூர்), 2ம் லெப். செல்லத்துரை (மகாலிங்கம் பாஸ்கர் - புதுக்குடியிருப்பு), லெப். ராகவன் (ஐயாத்துரை சிவ. குமாரலிங்கம் - ஒட்டுசுட்டான்), 2ம் லெப் ஜெயா (மாணிக்கம் தியாகராசா - கிளிநொச்சி), 2ம் லெப். யோகேந்திரன் (பொன்னம்பலம் ஆனந்தன் - மட்டக்களப்பு), 2ம் லெப். வாமதேவன் (சிவலிங்கன் லிங்கம் -மூதூர்), 2ம் லெப். இளங்கோ (சித்திரவேல் அசோக்குமார் மூதூர்), 2ம்லெப் அசோகன் (சுப்பையா யோகராசா- வாழைச்சேனை), 2ம் லெப். சந்திரன் (இராசு ஆறுமுகம் - வவுனியா), கப்டன் பாவலன் [சற்குணநாதன் ஜீவரட்ணம் - மயிட்டி], லெப். சிவராஜ் [குமாரலிங்கம்-மோகனதாஸ், இத்தாவில்], 2ம் லெப். ரஞ்சித்குமார் [குருசாமி துரைராசா-மன்னுர்]. வீரவேங்கை இலக்குவணன்] சுப்பிரமணியம் மகேந்திரன்- தம்பலகாமம்], வீரவேங்கை திருச்செல்வம் (நாகமணி பிரேமானந்தன்-கல்முனை), வீரவேங்கை தில்லை அழகன் (கறுப்பையா சிவகுரு-வவுனியா), வீரவேங்கை இளம்வழுதி (அந்தோனி முத்து டொமினிக் - நாவற்குழி), தமிழ்மாறன் (அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ்-முல்லைத்தீவு), வீரவேங்கை எல்லாளன் (நாதன் சிறி அம்பாறை), லெப். ஆதவன் (சுப்பிரமணியம் பாஸ்கரன்-முல்லைத்தீவு)

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கைகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## அகதிகள்மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு தங்கியிருக்கும் சுமார் ஒன்பதாயிரம் தமிழ் அகதிகள் 24 மணித்தியாலத்துக்கும் முகாம்களுக்குப் புறப்பட ஆயத்தமாக இருக்க வேண்டுமென கேட்கப்பட்டிருக்கிறுர்கள்,

மண்டப முகாம் இனிமேல் இலங்கைக்குத் திரும்பிச்செல்லும் அகதிகளை மாத்திரமே தங்கவைக்கும் தற்காலிக முகாமாக செயல்பட இருக்கிறது.

## நான்காவது நாள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வைப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாகுதல்களின் மத்தியிலும் விடுதலைப்புகள் சளைக்காது இராணுவத்தினரை எதிர்த்து பெரும்சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [வி]

## சொந்த விருப்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் இந்த 30 ஆயிரம் பேரில் இதுவரை 9, 388 பேர் மட்டுமே இந்தியக் கப்பல்களில் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறுர்கள்.

எஞ்சிய சுமார் 20 ஆயிரம் பேரில் பெரும்பாலானேர் தமது கருத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்வதாகவும், திரும்பிச்செல்லத்தான் வேண்டுமாஎன சிந்திக்க ஆரம்பித்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

# மாணவ தாதிகள் தெரிவுப் பரீட்சை

சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்களில் இருந்து மாணவ தாதிகள் தெரிவிற்கான பரீட்சை 23-03-1992 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களின் பெயர் பின்வருமாறு:

| | பெயர் | பதவி | நிறுவனம் | |
|---|---|---|---|---|
| 01. | வை. தவராஜசிங்கம் | பெ/தொ | மா. வை. | பருத்தித்துறை |
| 02. | ஆர். அரசரத்தினம் | ,, | ,, | ,, |
| 03. | கே. செல்வராசா | ஆ/பரி | ,, | ,, |
| 04. | வி. ஜெயதேவராசா | ,, | ,, | ,, |
| 05. | எஸ். சந்திரமோகன் | ,, | ,, | ,, |
| 06. | ஆர். செல்வராசா | ,, | ,, | ,, |
| 07. | கே. இராசரட்ணம் | கு. ந. சே. | ,, | சாவகச்சேரி |
| 08. | எஸ். பரமேஸ்வரி | பெ/தொ | ,, | ,, |
| 09. | எஸ். ஜெகதீஸ்வரன் | ஆ/பரி | ,, | ,, |
| 10. | என். பகவதி | பெ/பரி | ,, | தெல்லிப்பழை |
| 11. | வி. பாலசுப்பிரமணியம் | கு. ந. சே. | ,, | ,, |
| 12. | வி. குணபாலன் | ஆ/பரி | ,, | ,, |
| 13. | கே. துரைசிங்கம் | ,, | ,, | ,, |
| 14. | ஏ. சுப்பிரமணியம் | பெ/பெரி | சு. க. | கோப்பாய் |
| 15. | என். நற்குண்ராஜா | ஆ/பெரி | ,, | ,, |
| 16. | எம். நவராஜா | காவலாளி | மா. வை. | நெடுந்தீவு |
| 17. | வி. பாலசுப்பிரமணியம் | பெ/பரி | கி. வை. | பண்டத்தரிப்பு |
| 18. | உ. ஜெயகாந்தன் | கு. ந. சே | ம. ம. ம. ம. | மண்டைதீவு |
| 19. | ஏ. ஞானேஸ்வரன் | ,, | சு.-கூ. | காரைநகர் |
| 20. | எஸ். புஸ்பவதி | ,, | மா. ஊ.வ. | ஊர்காவற்றுறை |
| 21. | கே. அன்பழகன் | ஆ/பரி | ,, | ,, |
| 22. | ஏ. கௌரி சிவா | பெ/பரி | ,, | ,, |
| 23. | பி. எம். டொமினிஅம்மா | ,, | ,, | நெடுந்தீவு |
| 24. | எஸ். ஜெயசீலி | கு. ந. சே. | சு. வை. அ. | கிளிநொச்சி |

இவர்களிற்கான அனுமதி அட்டை கடமை புரியும் நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டவர்கள் அனுமதி அட்டை கிடைக்கப்பெருவிடினும் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

டாக்டர் வி. சிறீகாந்தா,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(ஏ-1995)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/10336/81